ஐக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 புரட்டாசி 18 ஷவ்வா 20 இதழ் 234
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-10-77

அரசியல் அமைப்பு திருத்த விவாதம்:

## தமிழர்கூட்டணிபங்குபற்ருது ஆட்சிமன்றகுழு இறுதிமுடிவு

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவையில் இன்று அரசியல் அமைப்பு திருத்தம் மீதான விவாதம் நடைபெறும்போது தமிழர் விடுதலைக்கூட்டணி அவ்விவாதத்தில் பங்கு பற்றவோ வாக்களிப்பில் கலந்துகொள்ளவோ மாட்டாது.

இவ்வாறு நேற்று கொழும்பில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நேற்று மாலை 7 மணிக்கு எதிர்க்கட்சித்தலைவர் திரு அ அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருவாளர்கள் எக்ஸ் எம் செல்லத்தம்பு, செ இராசதுரை, வி தர்மலிங்கம், எஸ் கதிரவேலுப்பிள்ளையும் வெளிநாடுசென்றிருக்கும்திரு.விஎன் நவரத்தினம், பண்டிதர் கா பொ இரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

(6-ம் பக்கம் பார்க்க)

# முன்னள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கைது!

## நான்கு சக அமைச்சர்களும் காவலில்!

புதுடில்லி, அக். 3

**உலகின் இரண்டாவது பெண் பிரதம மந்திரியும், ஜனநாயகத்தின் சிற்பி ஜவஹர்லால் நேருவின் புத்திரியுமான முன்னள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று புதுடில்லியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.**

**இவருடன் இவரது சகஅமைச்சர்கள் நால்வரும் இவரது ஆட்சிககாலத்தில் கடமைபுரிந்த பல அதிகாரிகளும் இன்று கைதுசெய்யப்பட்டனர்.**

ஊழல், பதவி துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட இரண்டு வழக்குகள் தொடர்பாகவே திருமதி காந்தி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று இந்திய மத்திய புலனய்வுத்துறை பொலிசார் தெரிவித்தனர்.

திருமதி காந்தி பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

திருமதி காந்தியின் அமைச்சரவையில் இருந்த திருவாளர்கள் கே. வி. மாளவியா, பி பீ. சட்டடோ பாத்தியா ஆகியோர் உட்பட நான்கு அமைச்சர்களும் வேறு பல உயர்அதிகாரிகளும் தொழில் அதிபர்களும் இன்று கைதுசெய்யபபட்டனர்.

சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் இருந்தே இந்த அதிகாரிகளில் சிலர் கைது செய்யப்பட்டனர். (இ)

## "அரசியல் நோக்குடனேயே கைதுசெய்யப்பட்டேன்" —இந்திரா

புதுடில்லி)

அரசியல் நோக்குடனேயே தம்மைப் பொலிசார் கைது செய்துள்ளனர் என்று திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

கைதான பின்னர் விடுத்த அறிக்கையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தாம் பொதுமக்கள் முன்னிலையில் செல்வதைத் தடுப்பதற்காவே தாம் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் திருமதி காந்தி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

## ஜாப். கடத்தல் விமானம் அல்ஜியாஸ் சென்றது

அல்ஜீயர்ஸ், அக். 3

குவெய்த்தில் நேற்று இறங்கிய ஜப்பானிய கடத்தல் விமானம் பின்னர் அங்கிருந்து அல்ஜியர்ஸ் சென்றதாக அறிவிக்கப்பட்டது.

இன்று காலை குவெய்த்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

முகத்துவாரம் கடை தீவைப்பு!

## பொலிஸ் தொடர்புண்டா? உயர்குழு ஆராய்கிறது

கொழும்பு, திங்கள்

கடந்த சனியன்றுகொழும்பு முகத்துவாரம் பொலிஸ்நிலையத்திற்கு முன்பாக உள்ள தமிழ்க்கடை ஒன்று தீக்கிரையாக்கப்பட்டதற்கும் பொலிசாருக்கும் தொடர்புண்டா என்ற சந்தேகம் இப்போது பொலிசார் மத்தியில் எழுந்துள்ளது.

தீக்கிரையான கடைக்கு அருகே பொலிசாருக்குச்சொந்தமானது எனக் கருதப்படும் தலையணைஉறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இச் சந்தேகம் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

விசேட பொலிஸ் குழு ஒன்று இது தொடர்பாக விசாரணை செய்துவருகிறது. (ம-இ)

## சகல வளாகங்களிலும் தமிழ் மாணவருக்கு விடுதி!

### இறுதியாண்டு பரீட்சையை பின்போடுவதற்கு முயற்சி!

கொழும்பு, திங்

கட்டுப்பெத்தைவளாகம் உட்பட சகல வளாகங்களிலும், தமிழ்மாணவர்களுக்கு விடுதி வசதி செய்து கொடுக்கப்படக் கூடியதாக உரிய நடவடிக்கைகள் எடுக்கும்படி சகல வளாகத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு நிரந்தரச்செயலாளர் திரு. ஜெயசிங்காவை, பாதிக்கப்பட்ட வளாக தமிழ் விரிவுரையாளர், மாணவர் பிரதிநிதிகள் சார்பில் தமிழர் மறுவாழ்வுக்கழகத்தலைவர் திரு கே சி நித்தியானந்தா சந்தித்த போது மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் சகல வளாகங்களையும் சேர்ந்த தமிழ்மாணவர், விரிவுரையாளர் அனைவருக்கும், பூரணபாதுகாப்பு அளிக்கப்படுமென நிரந்தரச்செயலாளர் உறுதியளித்தார்.

மாணவர் சார்பில் விடப்பட்ட கோரிக்கைகள் பலவற்றை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட நிரந்தரச்செயலாளர் இவ்விடயம் பற்றி ஆலோசித்து உபவேந்தர், வளாகத்தலைவர்கள் ஆகியோர் கூடும் கூட்டத்தில் மேற்படி அமைப்பின் பிரதிநிதிகளும் அழைக்கப்படுவார்கள் என உறுதியளித்தார்.

யாழ்ப்பாண வளாகத்திற்கு மாற்றம்பெறவிரும்பும் மாணவர்களுக்கு மாற்றம்கொடுக்கப்படுமென்றும், எவரும் கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும், திரு ஜெயசிங்கா கூறினார்.

இம்மாதம் 5ம் தேதி காலை, சர்வ வளாகமாணவர்பேரவையினர், தமிழ் மாணவர்பிரச்னை பற்றி ஆராயக் கூடும் கூட்டத்திற்கு, பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர் சார்பில் பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இதேசமயம், கல்வியமைச்சின் நிரந்தர செயலாளர் திரு தலநாயக்காவை, நாளைபாதிக்கப்பட்ட வளாகத்தமிழ்மாணவர் குழுவினர் சந்திப்பதற்கு திரு கே சி நித்தியானந்தா

(6-ம் பக்கம் பார்க்க)

அகதிகளுக்கு நிவாரணம்:

## அச்சுவேலியில் இன்று காணிக் கச்சேரி

யாழ்ப்பாணம், செவ்

யாழ் மாவட்டத்தில் அகதிகளுக்கு காணி வழங்குவதற்கான காணிக்கச்சேரி ஒன்று இன்று காலை அச்சுவேலி கைத்தொழில் பேட்டையிலும், கிராம முன்னேற்றச்சங்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

முதலாம் வகுப்பு அனுமதி:

## யாழ்கல்லூரிகளில் இடநெருக்கடி

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணத்திலுள்ளபாடசாலைகளில் முதலாம் வகுப்பில் அனுமதி பெறும் மாணவர்களின் தொகை இரண்டுமடங்காகக் கூடியுள்ளது. அரசு இவ்வருடம் மீளவும்5வயதுபூர்த்தியடையும் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளத்தீர்மானித்துள்ளதையடுத்து, இவ்வருடம் 5 வருடம் பூர்த்தியடைந்தோ

(6-ம் பக்கம் பார்க்க)

# உத்தியோகம்போனாலும் உயிர்போகாமல் பாருங்கள்: இங்கு வாழ வழி உண்டு"


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தணிக்கிணற்று வசதியுடனும், சிறிய வீடுகள் உள்ளடக்கியதுமான 1 1/2 பரப்பு காணி திருக்கோணமலை நகருக்குள் உடனடியாக விற்பனைக்குண்டு. கடித தொடர்புக்கு த. தெய்வேந்திரம், 15 முதலாவது ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7292

அக்கராயன் குளத்தில் 5 ஏக்கர் மேட்டு நிலமும், 10 ஏக்கர் நெல்வயலும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வைத்தீசன்ஸ் 162, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7766 7293

### தேவை

தீவுப்பகுதியிலுள்ள இந்து ஆலயத்தில் குடும்பமாக தங்கியிருந்து மாதாந்த வேதன அடிப்படையில் பூசை செய்வதற்கு அர்ச்சகர் தேவை. பரிசாதகர்களாகவும் கடமையாற்றக் கூடியவராகவும், குருப்பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். சம்பளம் பேசி ஒழுங்கு செய்யலாம். வீடு முதலிய வசதிகள் செய் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 7294 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7294

### தவறிவிட்டது

உடுப்புப் பெட்டி ஒன்று 1-ம் திகதி அதிகாலை மண்கும்பான் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் பிரதான ரோட்டில் தவறி விழுந்துவிட்டது. கண்டெடுத்தவர் தொடர்பு கொள்ளவேண்டிய விலசம்: அ. தெய்வேந்திரன், 80 டபிள்யு. ஏ. சில்வா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு-6. சன்மானம் வழங்கப்படும் 7295


## பாதிக்கப்பட்ட தமிழ்ஆசிரியர்கள் மத்தியில் கதிரவேலுப்பிள்ளை எம். பி. உரை

யாழ்ப்பாணம், செவ்.

"உத்தியோகம் போனாலும் போகட்டும், உங்கள் உயிர் போகாமல் பாருங்கள்" இங்கே வந்தவர்கள் 'உத்தியோகம் எங்கே வாழ்வு எங்கே' என்று கேட்கிறார்கள். நாம் ஆழமாகச் சிந்திக்கவேண்டும். எதிர்காலம் எப்படி அமையவேண்டும் என்று சிந்திக்கவேண்டும்."

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட தமிழர் ஆசிரியர் கூட்டத்தில் பேசிய கோப்பாய் எம். பி. திரு. எஸ் கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. கே. வணசிங்கா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் சுமார் 2000 பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

கோப்பாய் எம். பீ. மேலும் கூறியதாவது:- "பாதிக்கப்பட்ட இடத்திற்கு இன்னொரு ஆசிரியரை அனுப்புவது, நம் இனத்திற்குத் தீர்வாக இருக்காது. சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமே தீர்வாக இருக்கும். பாதிக்கப்பட்டவர் அந்த இடத்திற்குப் போகமுடியாவிட்டால், இதுவரை பாதிக்கப்படாதவர் அந்த இடத்திற்குப் போவது எப்படி? இங்கு வாழ வழியுண்டு.- ஒன்று சேர்ந்து நாம் சிந்திக்கவேண்டும்.

"இந்தப் பிரச்னை தனியார் ஆசிரியர் பிரச்னையோ அரசாங்க ஊழியர் பிரச்னையோ மட்டுமல்ல. இருந்த இடத்திற்குத் திரும்பவும் போய் வாழ்வது தமிழ் மக்கள் எல்லோருடையவும் பிரச்னையாகும். ஒவ்வொரு பகுதியினரும், வேலை விஷயத்தில் தனித்தனியாகத் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. பிரச்னைகளைப் பிரதமருடன் கலந்து ஆலோசித்தும், அந்த ஆலோசனைகளில், ஒரு சில முடிவுகள் தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நாளுக்குநாள் விஷயங்களும் தீர்வுகளும் மாறிவருகின்றன. திரும்பிப்போய் வாழ்வது எப்படி என்று பாதிக்கப்படாதவர்களும் கூடச் சிந்தித்துச் செயல்படவேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

### பிரச்னைகள் அடங்கவில்லை

பிரச்னை அடங்கிவிட்டதாக நினைக்க முடியாது. வெளி மாவட்டங்களின் பல இடங்களில் தமிழ் மக்கள், வேலை செய்வதும், வாழ்வதும், தெருவில் நடமாடுவதும் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கிறது. இதுபற்றித் தினமும் பல கடிதங்கள் எங்களுக்கு வந்து கொண்டிருக்கின்றன. பல இடங்களிலும் தமிழர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் வாழ்கிறார்கள்.

### பயங்கரத்தின் எல்லையில்......

தமிழ்ப் பிரதேசத்தில் வந்து வாழ உதவி செய்யுமாறு கேட்டுப் பலர் எங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கடிதம் எழுதுவதே பயங்கரமான விஷயமாக இருக்கிறது அவர்களுக்கு. சிறையில் வாழ்வதுபோல், பயங்கரத்தின் எல்லையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பாதிக்கப்படாத இடங்களில் வாழ்ந்துகொண்டிருப்பவர்களும், பயந்து கொண்டே வாழ்க்கை நடத்தி வருவதாக அறியக்கிடக்கிறது. தினமும் சூழ்நிலை மாறிக் கொண்டுவருகிறது அதற்கான தீர்வும் மாறிக் கொண்டு வருகிறது.

### பிரதமருக்கு முழுப் பிரச்னையும் தெரியாது

"அரசியல் தலைவர்கள் எல்லோரும் இக்கலவர சம்பவத்தைக் கண்டிக்கவில்லை. பிரதமருக்கு முழுப் பிரச்னையும் தகவல்களும் கிடைக்கவில்லை. உயர்மட்டத்திலுள்ள உயர் சிங்கள அதிகாரிகள் கூறுவது எதையும் சரி எனப் பிரதமர் நினைத்துக்கொண்டிருக்கிறார். சிங்கள உயர் அதிகாரிகள் தங்களுடைய கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் நிலைபற்றி சிந்தனை தீர்வு இரண்டையும் ஆராயவேண்டும்.

### சிந்திக்கவேண்டிய விஷயம்

திரும்பபோய்ச் சேவை செய்வது ஒவ்வொரு பாதிக்கப்பட்ட ஆசிரியரும் கவனமாக சிந்தித்துச்செயலாற்ற வேண்டிய விஷயம்.

உயர் சிங்கள உத்தியோகத்தர்கள் பலநெருக்கடிகளை உண்டாக்குகிறார்கள் எனத் தகவல் கிடைத்துள்ளது. நீங்கள் திரும்பிப்போகவேண்டும் உடன் போகவேண்டும் என்று அவர்கள் நெருக்கடியை உருவாக்குவார்கள். நெருக்கடிக்குப் பயப்படாமல் சேர்ந்து ஒற்றுமையாக இயங்குது அவசியம்.

"தெல்லிப்பழையில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளுக்குப் பிள்ளைகள் வரமாட்டார்கள் பிள்ளைகள் இல்லாமல் நீங்கள் போய் என்ன செய்வது? நீங்கள் முன்பு இருந்த வீட்டை தர மறுப்பார்கள் நீங்கள் எங்கே தங்குவது இப்படியான பல கஷ்டமான சூழ்நிலை உங்களை எதிர்நோக்கும் இருக்க இடமல்லாமல் திண்டாடுவீர்கள் உங்களுக்கு நடந்தவற்றை சொன்னால் இடமாற்றம் தருவார்கள். தொடர்ந்து அதே சிங்கள நாட்டில் எவ்வளவு காலம் வாழ்வது என்று நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் இந்த அடிப்படையில் மற்றவர்களும் சிந்திக்க வேண்டும்".

### அமைச்சர்களைச் சந்திக்கமுடியவில்லை

"தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வணசிங்கா கூறியதாவது தமிழ் சமுதாயம் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது நாம் பிரதமரையும், கல்வி அமைச்சரையும் சந்திக்க முயற்சித்தோம் நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம், இதற்கான ஏற்பாடுசெய்து ஒத்துழைப்புத் தந்தார் ஆனால் பிரதமரைச் சந்திக்க முடியாமல் போய் விட்டது

நாம் இங்கு நடந்தவற்றை உள்ளபடி கூறுகிறோம் கல்வி அமைச்சர் கதிர்காமம் சென்று விட்டதால், அவரையும் சந்திக்க முடியவில்லை புதன் கிழமை மந்திரிசபைக் கூட்டம் நடந்ததால் கல்வி அமைச்சரைச் சந்திக்க முடியவில்லை மறுநாள் அவர் இந்தியா சென்றுவிட்டார் இந்தநிலையில் அமைச்சர் பிரேமதாசாவைச் சந்திக்க முயற்சித்தோம் இதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதவிசெய்ய முன்வந்தார் ஆனாலும், அவரையும் சந்திக்க முடியாமல் போய்விட்டது

### செயலாளர் உறுதி

"பின்னர் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து பிரச்னைகளை நல்லமுறையில் விளக்கிக்கூறினோம் மனிதாபிமானத்துடன் பிரச்னைகளை அணுகுவதாக உறுதியளித்தார்

மந்திரிசபையின் பணிப்புக்கு அமைய, ஆசிரியர் பிரச்னைகளைத் தீர்க்கத் தயாராக இருப்பதாக அவர் கூறினார் பாதிக்கப்பட்ட இடங்களிலுள்ளவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்கத்தயாராக இருப்பதாகவும், அவர் கூறினார்

பாதிக்கப்பட்டதாக அரசு வெளியிட்ட இடங்களைத்தவிர மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களையும், நாம் அவருக்குச் சுட்டிக்காட்டினோம், இவர்களுக்கும் நிவாரணம் அளிக்க தயாராக இருப்பதாகக் கூறினார்

நியாயமான காரணம் காட்டியுள்ளவர்களுக்கு லீவு வழங்கப்படுமென்றும், கூறினார்

### சம்பளப்பிரச்னை

"சம்பளப்பிரச்னை பற்றியும் அவருடன் பேசினோம் வடமாகாண கல்விப்பணிப்பாளர், ஒவ்வொருமாவட்டத்திற்கும் பட்டியல் அனுப்பியிருந்தார் என்றும், சிலமாவட்டங்களில் சம்பளம் வழங்க மறுப்பதாகவும் எடுத்துக்கூறினோம்

"நுவரேலியா மாவட்டத்திலுள்ள பொகந்தலாவ பாடசாலை அதிபர் எழுதிய கடிதத்தைக் காட்டினோம் 19-ம்தேதி வேலைக்கு வராதவர்களுக்குச் சம்பளம் வழங்கக் கூடாது எனக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளதாக அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது, உடனடியாகத் தொலை பேசியில் எங்கள் முன்னிலையில், செயலாளர். கல்விபணியாளருடன் தொடர்பு கொண்டார். பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்து அந்த அறிக்கையை அனுப்பியதாக அவர் கூறினார். பத்திரிகையைப் பாராமல், வழக்கமான நடவடிக்கையை எடுக்குமாறும் அவருக்குக் கூறினார். சம்பளம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் பணித்தார்.

உங்களை எதிர் நோக்கும் சகல விஷயங்களையும் மாநகல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். நிச்சயம் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். நாம் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருப்போம்.

தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. என் பாலசுப்பிரமணியம் பேசுகையில், இது தனித்து சங்கப் பிரச்னையல்லவென்றும் ஒரு சமுதாயத்தின், இனத்தின் பிரச்னை என்றும் கூறினார்.

அவர் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

### ஆசிரியைகள் பற்றி...

'ஆசிரியைகள் பிரயாணத்திற்கு பயந்து, ஆகஸ்ட் 17-ல் நடந்தது தங்களுக்கும் நடந்துவிடுமோ என அஞ்சி திரும்பவும் அந்த இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் இருப்பதாக நாம் நிரந்தரச் செயலாளரைச் சந்தித்த போது அவருக்கு எடுத்துக் கூறினோம். தமக்கு அப்பேற்பட்ட அச்சத்தை தெரிவித்து விண்ணப்பித்தால் காருண்யத்துடன், அந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படும் என அவர் உறுதியளித்தார். விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம், நேரடியாக தமது விலாசத்திற்கு தனித் தனியாக அனுப்பிவைக்கும் படியும் அவர் ஆலோசனை கூறினார். கூட்டாக அனுப்பும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படாதென்றும் அவர் கூறினார். எந்த ஒரு சங்கமும் இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை தமக்கு கூட்டாக அனுப்பக் கூடாதென்றும் தெரிவித்தார்.

நிவாரணம் அளிக்கப்படக் கூடிய நியாயமான காரணங்

(5-ம் பக்கம் பார்க்க)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

1. கந்தையா சாம்பமூர்த்தியும் பெண்
2. சிவஞானதேவியும். காரியாதிகாரி ஒழுங்கை, தெல்லிப்பழை கிழக்கு. தெல்லிப்பழை.

வாதி.

இல: ஈ.டு/1267:

எதிராக

1. சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியமும் பெண்
2. சரஸ்வதியும், வயாவிளான்

பிரதிவாதிகள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/1267-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14-ம் திகதி (14-10-1977) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 3900/-ம் 7-6-1976ம் ஆண்டு தொடக்கம் 25-3-1977 வரைக்கும் ரூபா 3000/-க்கு 20 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 563/05.

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி, மயிலிட்டிக் கோவிற்பற்று. வயாவிளான் இறை "மாவடிக் குடியிருப்பு" நில பர. நான்கும் குளி ஒன்றரை (நில பர. 4 குளி $1\frac{1}{2}$) யும் செய்பயிர் வான்பயிர்களும் தென்மேற்சப்புறமாக துரையான் சீமா என்னும் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்கால் உரித்தும், எல்லை கிழக்கு கீழ்விபரிக்கப்படும் 2-ம் காணி வடக்கும், மேற்கும் ஒழுங்கை, தெற்கு தப்பு ஆறுமுகத்தின் ஆதனம். இதடங்கலும். இது H 502/151-ல் பதியப்பட்டது.

2. மேற்படி வயாவிளான் இறை "கொட்டடி" நிலப்பரப்பு மூன்றரையும் (நில பர. $3\frac{1}{2}$) எல்லை கிழக்கு சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியத்திற்கும் பெண் சரஸ்வதியினதும் ஆதனம், வடக்கு ஆறுமுகம் வயிரவப்பிள்ளையின் ஆதனம், மேற்கு மேற்காட்டிய முதலாம் ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசி இது H 166/234-ல் பதியப்பட்டுள்ளது.

3. மேற்படி வயாவிளான் இறை "பணிக்கவளவு" நிலப்பரப்பு இரண்டு (நில பர 2) எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் செல்லத்தின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு ஆறுமுகம் வயிரவப்பிள்ளையின் ஆதனம். மேற்கும் தெற்கும் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியத்துக்கும் பெண் சரஸ்வதிக்கும் சொந்தமான ஆதனம் இதடங்கலிற் சொரியலாய் குளி ஐந்துடன் எட்டில் ஐந்து. (குளி 5 5/8) இது H 226/72-ல் பதியப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
ந. சிவஸ்கந்தா
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்,
7286

நாகேந்திரம்,
வட்டுக்கோட்டை.
10-9 77



ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்

## தாபகர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் 1977

காலம்: 7-10-1977 வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணி
கௌரவவிருந்தினர்கள்:- திரு. சி. சுப்பிரமணியம்
(முன்னைநாள் அதிபர்)
திருமதி அ. சுப்பிரமணியம்
திரு. த. கந்தசாமி
(சிரேஷ்ட பதில் அரசாங்க பகுப்பாளர்)

பழையமாணவர், பெற்றோர், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்

7275

# ஊழலை ஒழிக்க முற்படுபவர்களே ஊழலை அனுமதிக்கலாமா?

## தமிழக முதல்வர் மீது கலைஞர் தாக்கு!

சென்னை, அக். 3

'வஞ்சம் வாங்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டு விசாரணையில் இருக்கும் அமைச்சரை காப்பாற்றுவதற்கு ஒரு கூட்டத்தையே ரத்துச்செய்த எம். ஜி. ஆர். தலைமையில், ஊழல் ஒழிக்கப்படும் என்று கவர்னர் நம்புகின்றாரா?'' என்று கலைஞர் மு. கருணாநிதி சிம்சன் தொழிலாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் கேட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: இன்று தமிழகத்தை ஆட்சி புரிகின்ற கட்சிக்காரர்கள், வார்த்தைக்கு வார்த்தை ''ஊழல் என்றும், ஏதோ இவர்கள் ஊழலை ஒழிக்கவந்த உத்தமர்கள் போலவும் பேசுகிறார்கள். அதற்குப் பரபரப்பான முறையில் பத்திரிகைகளும் விளம்பரம் கொடுக்கின்றன. ஊழலை இவர்களால்தான் ஒழிக்கமுடியும் என்று பத்திரிகைகள் தலையங்கம் தீட்டுவதும் டில்லியிலுள்ளவர்கள் எம். ஜி. ஆரால் தான் ஊழலை ஒழிக்கமுடியுமென நம்பிக்கொண்டு கட்டுரைகள் தீட்டுவதுமாக ஏடுகள் செயல்படுகின்றன.

''அதுமட்டுமல்ல, தமிழக ஆளுநர் பிரபுதாஸ்பட்டுவாரி கூட'' ஊழலை ஒழிப்பதில் நான் கண்ணும் கருத்துமாக இருக்கின்றேன், இதில் முதலமைச்சர் எம். ஜி. ஆர். கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்'' என்று குறிப்பிட்டு பத்திரிகைகளில் செய்திகளும் வெளிவந்துள்ளன.

கவர்னர் பிரபுதாஸ் பட்வாரியின் உள்ளத்தை நான் சந்தேகிக்கமாட்டேன். அதே நேரத்தில் முதலமைச்சர் எம். ஜி. ஆரும் ஊழலை ஒழிப்பதில் மிகுந்த அக்கறை கொண்டவராக இருக்கிறார் என்று அவர் கூறியிருக்கிறாரே, அவர் சொன்ன வார்த்தை முதலமைச்சர் எம். ஜி. ஆருக்கும் பொருந்துமா என்பதில்தான் எனக்குச் சந்தேகம்.

''மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே தவறு செய்தால், தவறுகளை சுட்டிக்காட்டினால் அவர்களை விசாரிப்பதற்கென தி. மு. க. அரசே தனியான ''மக்கள் பிரதிநிதிகள் குற்றத்தடுப்புச் சட்ட''த்தை கொண்டுவந்து சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க நிரந்தரமான கமிஷனை நியமித்திருக்கிறது. இந்தக் கமிஷன் நான்கைந்து வழக்குகளை விசாரித்துள்ளது.

''இக்கமிஷனில் அ. இ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் திரு. சௌந்தரபாண்டியனும் விசாரிக்கப்பட்டு, வழக்கு முடியாமல் இருக்கும் தறுவாயில் எம். ஜி. ஆர். முதலமைச்சராக வந்து இவருக்கும் அமைச்சர் பதவி வழங்கினார். இப்படியாக ஊழலை ஒழிக்க முற்படுபவர் ஊழல் பேர்வழிகளுக்கு அமைச்சர் பதவி வழங்கினால் ஊழலை ஒழிக்கலாமா?'' என்று கலைஞர் கேட்டார். (செ)

## இவரன்றோ ஐ. ஆர். ஸி.

கொழும்பு, திங்கள்

பிரபல திருட்டுப்பேர்வழி ஒருவரை பொலிஸார் பலப் பிட்டியில் கைதுசெய்த போது பொலிஸாரே திகைத்துநிற்கும் வகையில் அந்த 'ஐ ஆர். சி' யிடம் பல ஆயிரக்கணக்கான ரூபா மதிப்புள்ள 'சொத்து' இருக்கக் காணப்பட்டது.

பதினைந்து தங்க மாலைகள், ஆறு தங்க வளையல்கள், மூன்று சைக்கடிகாரங்கள், தங்கப்பாளம் ஒன்று, மூன்று கைத்துப்பாக்கிகள், இரண்டு துப்பாக்கிகள், ஒரு சுழல்துப்பாக்கி, தங்கமோதிரங்கள் ஆகியவற்றுடன் ரொக்கப்பணமாக 4,862 ரூபாவும் இருக்கக் காணப்பட்டது!

இந்த ஐ. ஆர். சி. யின் சொத்துத்தான் என்னே!

## 126 கோடிரூபாய்கிடைத்தது!

யாழ்ப்பாணம், திங்கள்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு 74ம் ஆண்டில் 126 கோடி ரூபாய் அறவிடப்பட்ட தொகையாகக் கிடைத்துள்ளது.

இது வருமானவரி, செல்வவரி கொடைவரி, மொ.வி. வரி, மரணசொத்து வரி, முத்திரை வரி, மேலதிக இலாப வரி, தனியார் வரி, வருமான வரியில் மேலதிகம், நிலவரி, அரிசி மானிய வரி, மூலதன வரி என்று அடங்கும். இத்தொகையை இறைவரித் திணைக்களம் அறவிடுவதற்கு 13 கோடி ரூபாயை செலவிட்டுள்ளது.

இறைவரித் திணைக்களத்திற்கு 50 விஷயங்களில் தகவல் கொடுத்தோருக்கு ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (இக)

## இ. போ. ச. இயக்குநரின் சாதனை

கொழும்பு, திங்கள்

இ. போ. ச. டிப்போவில் நடந்த ஊழல் ஒன்றைக் கண்டுபிடிப்பதற்காக இ.போ. ச. டைரக்டர் ஒருவர் டிப்போ கட்டிடத்தின் மேல் கூரைக்கு ஏறிச் சென்றார்.

கேகாலை இ. போ. ச. டிப்போவில் உதிரிப்பாகங்களில் ஊழல் நடந்துள்ளதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே அவர் கூரையில் ஏறிக்கொண்டார்.

இ. போ. ச. டைரக்டர் சபைக்குப்புதிதாக நியமனம் பெற்ற திரு.எவ்ரட் ஜீ.டி' சில்வா கூரைக்குச் சென்ற போது அங்கு ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான பஸ் உதிரிப்பாகங்கள் மறைத்துவைத்திருப்பதைக் கண்டுபிடித்தார்.

இதுதொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. (க)

## 900 கோடி ரூபா?

புதுடில்லி, அக். 3

பாரதமுன்னாள் பிரதமர் வீட்டில் இருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட அன்றிரவு திரேந்திர பிரம்மச்சாரியின் ஆச்சிரமத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பணத்தின் தொகை 300 கோடிமுதல் 900 கோடிக்கிடையில் இருக்குமென மத்திய அரசு புலனாய்வு வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

இப்பணம் மத்திய ஆசிய நாடு ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

இப்பணம் மத்திய ஆசியநாடு ஒன்றின் தூதுவராலயத்திற்கே நேரடியாக எடுத்துச் செல்லப்பட்டதாம்!

இது தொடர்பாகவே பாரத முன்னாள் பிரதமர் கைது செய்யப்படலாம் என்றும் திருமதி இந்திராவின் நம்பிக்கைக்குரிய ஒருவரும் கைது செய்யப்படலாமென்றும் தெரிகிறது. (இ)

## பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், செவ்.

சுகாதார இலாகாவில் 36 வருடங்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றயாழ்மாவட்டசுகாதாரப்பகுதி மேற்பார்வையாளர்திரு. பி. வின்சன்டுக்குப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்க யாழ். கிளையினர் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் பிரிவுபசார விருந்தளித்தனர். (கி—அ)

## "நாஞ்சில் கூறிய நஞ்சு தோய்ந்த பேச்சு"

சென்னை, அக். 3

'கருணாநிதி சாகாவரம் பெற்றவனல்ல இயற்கை அன்னை அவனை இன்னும் சில காலம் வாழவிடவும் கூடும் அல்லது காற்றிலே உதிரும் பூவாக மாற்றவும் கூடும். கருணாநிதியைக் கைது செய்வதால் கழகத்தை அழித்து விடலாமென எண்ணுபவர்கள் கருணாநிதியின் சாவின் பின்பும் கழகம் வாழும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.'

இவ்வாறு தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி நாஞ்சில் மனோகரன் 'கருணாநிதியையும் அவரது சகாக்களையும் கைது செய்ய' வேண்டுமென வடசென்னையில் வைத்துக் கூறிய கூற்றுக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டார்

அவர் மேலும் பேசுகையில், 'இந்திராவின் ஆட்சியில் கழகத்தை அழிக்க முயன்றனர். அவர்கள் செய்த 'பொலிஸ் வானில் ஊர்வலம்-பொலிஸ் அடிதடிகளையே' எம். ஜி ஆரும் கழகத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடுகிறார். இவைகளை கண்டு நாம் பயப்படமாட்டோம். தியாகப்பட்டம் பெறுவதற்காக குமரி மாவட்டப் போராட்டத்தில் ஒரு கிழமை மறியல் தா என அரசாங்க வழக்கறிஞர்களை கேட்டவர்கள் தான் இவற்றைக் கண்டு அஞ்சுவார்கள். கருணாநிதியைக் கைது செய்ய வேண்டுமென்று நாஞ்சில் கூறிய நஞ்சு தோய்ந்த பேச்சுக் கண்டு கழகத்தவர்கள் கலங்க மாட்டார்கள். கருணாநிதிக்கு பின்பும் கழகம் வாழும்' என்றார்.

## மாநில சுயாட்சி பற்றி அமெரிக்காவில் வாஜ்பாயி

நியூயோர்க் அக்.3

ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியூயோர்க்குக்கு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் வாஜ்பாயிடம் தமிழகத்தில் மாநிலசுயாட்சி பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.

அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் அவருக்கு அளித்த விருந்துபசாரம் ஒன்றில் மாநில சுயாட்சி பற்றி உங்கள் கருத்தென்ன எனக் கேட்டதற்கு அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படுவதையே மத்திய அரசுவிரும்புகிறது. மாநிலசுயாட்சியை சுருக்கவோ குறுக்கவோ எந்த விதமான எண்ணமும் அரசுக்கு இல்லை என்றார்.

நீங்கள் ஐ. நா. சபையில் இந்தியிலேயோ பேசப்போகின்றீர்கள் என்ற மற்றொரு கேள்விக்கு நான் இந்தியிலேயேபேச விரும்புகின்றேன். ஆனால் அதற்குரிய வசதிகள் இருக்குமென நான் எண்ணவில்லை மேலும் தென்னிந்தியாவில் எந்தக் காரணம் கொண்டும் இந்தி திணிக்கப்படமாட்டாது, யாரும் இந்திபடிக்கவேண்டுமென கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள் ஆங்கிலத்தில் தொடர்ந்தும் கருமமாற்றலாம் அவர்களாக இந்தி படிக்க வேண்டுமென விரும்பும் வரை இந்நிலையே நீடிக்கும் நான் தமிழகத்தில் தமிழில் பேசுவதையே விரும்புகிறேன் என்று பதிலளித்தார் (கி)

## "மீன்பிடித்தொழிலை இகழ்ச்சியாக கருதும் நிலை மாறவேண்டும்"

**வி. தர்மலிங்கம் எம். பி.**

யாழ்ப்பாணம், திங்கள்

''தமிழ்மக்களை இன்று எதிர் நோக்குகின்ற பொருளாதாரப் பிரச்னைகளுக்கு மீன்பிடித் திட்டங்கள் பெரும்பயனளிக்க வல்லன'' என்று நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கத்தினரின் மீன்பிடித்திட்ட வெள்ளோட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மானிப்பாய்த் தொகுதி எம் பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

இச்சங்கம் தொடங்கி 86 ஆண்டுகளின் பின் இந்த மீன்பிடித்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. நவாலித்துறையில் வெள்ளோட்ட வைபவம் தமிழ்கலாசாரபடி திரு. வி. தர்மலிங்கம் எம்.பி.யினால் குத்து விளக்கேற்றி ஆரம்பத்துவைக்கப்பட்டது. வண எம். சுப்பிரமணியம் வள்ளத்தைக் கடலுக்குள் செலுத்தினார் மாவட்ட மீன்பிடி இணைப்பதிகாரி திரு. எஸ். சிறீஸ்கந்தராஜா சங்கக் கொடியினை ஏற்றிவைக்க சீநோர் பொதுமுகாமையாளர் திரு கே. பாலச்சந்திரன் வெளி இணைப்பு இயந்திரத்தை இயக்கி வெள்ளோட்டத்தை ஆரம்பித்துவைத்தார்.

சென் பீற்றர்ஸ் பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் திரு தர்மலிங்கம் எம. பி கூறியதாவது:

''இந்த மீன்பிடித் திட்டம் நவாலி மக்களுக்கு மட்டுமன்றி தமிழ் மக்கள் அனைவருக்கும் பயனளிக்கத்தக்க திட்டமாகும் தமிழ் மக்களின் பொருளாதாரம் விருத்தியுற உடனடியாகச் செயற்படக்கூடிய திட்டம் மீன்பிடித்திட்டமாகும்

''யாழ்ப்பாணப்பகுதியிலே மீன்பிடித்தொழில் ஒரு கீழ்த்தரமான தொழிலாகக்கருதி அதைச் செய்பவர்கள் தங்களைக் காட்டிக்கொள்ள விரும்புவதில்லை இத்தகைய சமுதாய சீர்கேட்டைக் களைந்து படித்த வாலிபர்களாலேயே இத்தகையதொரு திட்டம் செயற்படுத்தப்படுவது நவாலி இளைஞர்களின் முன்னணி நடவடிக்கைகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாகிறது

''கடந்த அரசாங்கம் அதன் முழுக் கவனத்தையுமே விவசாய விருத்தியில் செலுத்தியது அதிலொருபகுதியை மீன்பிடித்துறையிலும் செலுத்தியிருந்தால் மீன்பிடியும் அபிவிருத்தியடைந்திருக்கும்

நமது நாட்டு மீனவர்கள் சமுத்திரத்தின் மத்திக்குச் சென்று மீன்பிடிக்கும் வசதிகளையும் வாய்ப்புகளையும் இழந்திருப்பதால் அன்நியநாட்டுக் கப்பல்கள் எமது நாட்டில் வந்து மீன்பிடித்துச் செல்கின்றன இதனால் மீன்பிடித் தொழில் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்தநிலை மாற இத்தகைய மீன்பிடித்திட்டங்கள் வழிவகுக்கும் என்றார்

மாவட்ட மீன்பிடி இணைப்பதிகாரி திரு எஸ் சிறிஸ்கந்தராசா பேசுகையில் ''சீநோரின் உதவியோடு மக்கள்வங்கி இத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னின்று உதவுவதற்குத் தயாராக உள்ளது இதேபோன்று இந்த மீன்பிடித் தொழிலுக்குத் தேவையான 28அடிக்கு மேற்பட்ட நீள வள்ளங்களை சீநோரிடம் இருந்துபெற்றால் அதன் அரைவாசிப்பணத்தை இலங்கை வங்கி உதவிப் பணமாக வழங்க முன்வந்துள்ளது எனவே இதுபோன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் சகல இளைஞர்களும் ஈடுபட வேண்டும்'' என்றார் நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கப் பொதுச்செயலாளர் திரு எஸ் விஜயகுலசிங்கமும் பேசினார் (கா-அ)

## "தொழிலுக்கொரு சங்கம் ஐக்கியத்தைச்சீர்குலைக்கும்"

யாழ்ப்பாணம், செவ்

'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்என்பது தொழிலாளர்களின் ஐக்கியத்தைக் குலைக்கும் நடவடிக்கையாகும். தொழிலாளர்கள் காலாகாலமாகக் கஷ்டப்பட்டுப் பெற்றெடுத்த உரிமைகள் இதன் மூலம் சிதறடிக்கப்படும். தொழிற்சங்க உரிமையை நாம் பாதுகாக்க வேண்டுமானால் இவ்வித சர்வாதிகாரப் போக்கை முறியடிப்பதற்கு

(5-ம்பக்கம் பார்க்க)

# அரசியலமைப்புத்திருத்தம்மீதான விவாதம்

# இன்றுதேசிய அரசுபேரவையில்ஆரம்பமாகிறது

இலங்கைக் குடியரசின் இரண்டாவது அரசியலமைப்பு திருத்தம் மீதான விவாதம் இன்று தேசியஅரசுப் பேரவையில் ஆரம்பமாகிறது. புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் பேரவைக்கு வரும் முக்கிய விவாதம் இதுவாகும்.

168 ஆசனங்களைக்கொண்ட தேசிய அரசுப் பேரவையில் 139 ஆசனங்களை (தெகிவளை தவிர்ந்த) கைப்பற்றியுள்ள அரசாங்கத்துக்கு எந்தவிதத் தீர்மானங்களையும் நிறைவேற்றுவதில் பிரச்னை இருக்கமுடியாது. அவ்வாறே அரசியலமைப்பு திருத்தமும் பேரவையில் நிறைவேற்றப்படும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை, திருத்தம் கொண்டுவரப்படும் அரசியலமைப்புச் சட்டத்தை முற்றுமுழுதாகவே எதிர்த்த கட்சியும் அந்த அரசியலமைப்புச் சட்டத்தை யாத்த கட்சியும் எதிர்க்கட்சிகளாகவிருக்கின்றன. எனவே எதிர்க்கட்சிகள் பலம் குறைந்தனவாகவிருந்தாலும் களத்திரமான விவாதத்தை எதிர்பார்க்கலாம்.

### 1970-ல் கிடைத்த மக்களாணை

1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பொதுவேலைத்திட்டத்தின்கீழ் ஒன்றுசேர்ந்துஆட்சிக்குவந்த சிறிலங்காசுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை இணைந்த் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நாட்டைக் குடியரசு ஆக்குவதற்கான மக்களாணைகிடைத்திருப்பதாகக் கூறி குடியரசு இலங்கைக்கான புதிய அரசியலமைப்பை யாக்கும் அரசியல் சட்ட நிர்ணயசபையாகவும் பாராளுமன்றத்தைப் பிரகடனம் செய்தது.

லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்களுள் ஒருவரான அப்போதைய அரசியல் சட்ட அமைப்பு அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா புதிய குடியரசு அரசியலமைப்புச்சட்டத்தை யாத்தார்.

38 அடிப்படைத் தீர்மானங்களைக் கொண்டதான அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது அடிப்படைத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டதும் இப்போதைய பிரதான எதிர்க்கட்சியினரான தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் அரசியல் நிர்ணயசபையினின்றும் வெளியேறினர்கள். அதன் பின்னர் அவர்கள் அரசியல் நிர்ணயசபையைபகிஷ்கரித்தே வந்தார்கள்.

### குடியரசுப் பிரகடனம்

எனினும் அரசாங்கம் தொடர்ந்தும் அடிப்படைத் தீர்மானங்களை நிறைவேற்றியது. 1972 மே 23ம் திகதி நாட்டைக் குடியரசாகப் பிரகடனம் செய்தது.

அரசியல் நிர்ணயசபையை பகிஷ்கரித்த தமிழர் விடுதலைக் கூட்டணி, குடியரசு தினத்தன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடையடைப்பு, ஹர்த்தால், கறுப்புக்கொடி ஆகிய இந்நடவடிக்கைகள் மூலம் எதிர்ப்பும் தெரிவித்ததுடன் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து காலஞ்சென்ற தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் புதிய குடியரசு அரசியல் சட்டப் பிரதியை தீயிலிட்டனர்.

### தமிழர் விடுதலைக் கூட்டணி

தமிழ் மக்களிடையே இன்று வலுவடைந்துள்ள தனிநாடு கோரிக்கைக்குக் காரணமாக அமைந்ததும் முட்டிமோதிக் கொண்டிருந்த தமிழ் அரசியல்கட்சிகள் ஒன்றுசேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாவதற்கும் இந்த அரசியல் அமைப்புச் சட்டம்தான் காரணமாகவிருந்தது.

தமிழர் விடுதலைக்கூட்டணியினர் புதிய குடியரசு அரசியலமைப்பிலாவது தங்களின் நியாயமான உரிமைகளை சமாதானமான முறையில் பெற்று சிங்கள மக்களுடன் ஒற்றுமையாகவே வாழவிரும்பினர்கள். அதற்காக அவர்கள் பெரிதும் முயன்றனர்கள்.

இந்தியாவில் புதிய அரசியலமைப்புச்சட்டம் யாக்கப்பட்டபோது ஜனுப் முகம்மதலி ஜின்னு தலைமையிலான முஸ்லிம்லீக், அரசியல் சட்ட நிர்ணயசபையை முற்றாகப் பகிஷ்கரித்தது. அதன் விளைவாக இந்தியாவிலிருந்து பாகிஸ்தானை பிரித்துக் கொடுக்க வேண்டிய நிலைபிரிட்டனுக்குஏற்பட்டது.

ஆனால் இலங்கையில் அப்படியொரு நிலை ஏற்படவில்லை. தமிழ் உறுப்பினர்கள் அரசியல் நிர்ணயசபையில்கலந்து கொண்டு தங்கள் உரிமைகள் தொடர்பாக நீண்ட உரைகளைப் பலர் பல தடவைகளில் ஆற்றியிருக்கிறார்கள்.

### வல்வை மாநாடு

சுயாட்சிக்கழகம் உட்பட சகல தமிழ் அரசியல் கட்சிகளும் கட்சி சார்பற்ற பிரமுகர்கள், கல்விமான்களும் கலந்து கொண்ட வல்வெட்டித்துறை மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட 9 அம்சத் திட்டத்தின் அடிப்படையில் அரசியல் நிர்ணயசபையில் அடிப்படைத் தீர்மானங்களுக்கு திரு. செல்வநாயகம் திருத்தங்களைச் சமர்ப்பித்தார்.

தமிழும் அரசகரும, நீதிநிருவாக மொழியாதல், இலங்கையில் எப்பாகத்திலும் வசிக்கும் தமிழரோ சிங்களவரோ தம் சொந்த மொழியில் அரசுடன் கருமம்ஆற்றுமுரிமை, தாய் மொழியே போதனுமொழி, அடிப்படை உரிமைகளுக்கு மூரணை நடவடிக்கைகளையொட்டி நீதிமன்ற நடவடிக்கை; சாதி ஒழிப்பு; பிரஜா உரிமை சம்பந்தமானவற்றை இந்த 9 அம்சத்திட்டம் கொண்டிருந்தது.

இந்த அடிப்படையில் அரசியல் நிர்ணயசபையில் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தீர்மானங்கள் ஒவ்வொன்றாக முன்மொழியப்பட்டபோது திரு. செல்வநாயகம் சார்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் தோல்வியே கண்டன.

கடைசியில்; எல்லாச்சட்டங்களும் சிங்களமொழியில் ஆக்கப்பட வேண்டும்; அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பும் இருக்க வேண்டும்' என்ற 11வது அடிப்படைத் தீர்மானம் முன்மொழியப்பட்டபோது அதற்கு முன் மொழியப்பட்ட திருத்தமும் தோல்வியுறவே தமிழர்கூட்டணி உறுப்பினர்கள் அரசியல் நிர்ணயசபையினின்றும் வெளியேறினர்கள்.

திருத்தம் கொண்டுவரப்படும் அரசமைப்புச் சட்டம் தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி கொண்டிருந்த தொடர்பு இதுவே.

### இரண்டாவது திருத்தம்

இப்போது, பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்த அரசியலமைப்புச் சட்டத்தின் ஜனதிபதி சம்பந்தப்பட்ட பிரிவுகளில் இரண்டாவது அரசியலமைப்பு திருத்தத்தைச் சமர்ப்பித்துள்ளார்.

திருத்தம் கொண்டுவரப்படும் அரசியலமைப்புச்சட்டம் யாக்கப்பட்டபோது அந்த யாக்க அவையைப் பகிஷ்கரித்து, யாக்கப்பட்ட அரசியல் அமைப்புச்சட்டத்தை தீயிலுமிட்ட பின்னர் அதன் சில பிரிவுகளில் மட்டும் கொண்டுவரப்படும் திருத்தங்களில் எவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி பங்குகொள்ளலாம் என்றும் அரசியல் அமைப்புச்சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றுதானே இந்நடவடிக்கைகளை தமிழர் விடுதலைக்கூட்டணி மேற்கொண்டது. எனவே அரசியலமைப்புக்கான திருத்தங்களில் பங்கு கொள்ளலாம் என்றும் கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றபோதிலும் இக்கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்வரை இது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழு முடிவெதனையும் எடுக்கவில்லை.

இப்போது கொண்டுவரப்படும் திருத்தத்தில் ஜனதிபதியாக வருபவர் தமிழ் மக்களின் வாக்குகளிலும் தங்கியிருப்பதும், மாவட்ட அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனதிபதிக்கிருப்பதும் தமிழ் மக்களுக்குச் சாதகமானவை என்று சொல்லப்படுகிறது.

### ‘மாலி’

மாவட்ட அமைச்சர் பதவிகளை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளும் என்றால் விவாதத்திலும் அது கலந்துகொள்வதில் தவறிருக்க முடியாது என்றே கருதலாம். மேலும் தங்களுடைய கருத்துக்களை-திருத்தங்களை இவர்கள் தெரிவிக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

### சுதந்திரக் கட்சி நிலை?

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை யாத்தவரான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவும் அவரது சகாக்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் தங்களின் உறவை பின்னர் முறித்துக்கொண்டதுடன் இப்போது தேசிய அரசுப் பேரவைக்கும் வெளியிலேயே இருக்கிறார்கள். ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகித்த கட்சிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிமட்டுமே இப்போது பேரவையில் இருக்கிறது.

தாம் ஒன்று சேர்ந்து உருவாக்கிய அரசியலமைப்பு சட்ட விவகாரத்தில் இவர்களிடையே எப்போதும் ஒற்றுமை ஏற்படுவதுண்டு.

தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான வழக்கில் ட்ரயல் அட்பார் நீதிமன்றம் அவசரகாலச் சட்ட விதிகள் செல்லுபடியற்றவை என்று அளித்த தீர்ப்பின்போது முன்னர் ஒரு தடவை இவர்களிடையே இந்த ஒற்றுமையை அவதானிக்க முடிந்தது.

அப்போதும் அரசாங்கத்துடன் மனக்கசப்புற்று எதிர்க் கட்சியிலிருந்த கலாநிதி கொல்வின், அரசியல் சட்டத்தின் மீது தனக்குள்ள பாசத்தை தேசிய அரசுப் பேரவையில் காண்பித்தார் ‘கொல்வின் காட்டிய தாய்ப்பாசம்’ என்று ‘ஈழநாடு’ அதுபற்றி எழுதியிருந்தது.

### திருத்தங்களுக்கு கடும் எதிர்ப்பு

இப்போது பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்படும் திருத்தத்துக்கும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும், கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வாவும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

தனி மனிதனிடம் அதிகாரங்கள் செல்வதாக இவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். முன்னர் நீதியமைச்சராகவிருந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவும் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

ஆக, பேரவைக்கு உள்ளேயும், வெளியேயும் இத்தகைய சூழலிலேயே இரண்டாவது அரசியலமைப்பு திருத்த விவாதம் இன்று பேரவையில் இடம் பெறுகின்றது. இத்திருத்தத்தின் மூலம் இலங்கையின் பாதுகாப்பு உட்பட ஆட்சித்துறைத் தத்துவம் ஜனதிபதி மூலம் பிரயோகிக்கப்படும்.

ஜனதிபதி, ஆட்சித்துறைத் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும் அமைச்சரவையின் தலைவராகவுமிருப்பார்.

தேசிய அரசுப் பேரவையின் நம்பிக்கையை மிகக்கூடிய அளவில் பெறக்கூடியவராக இருப்பார் என தான் கருதும் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரை ஜனதிபதி முதலமைச்சராக நியமிப்பார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை, பணிகள் குறித்தும் ஜனதிபதியே தீர்மானிப்பார்.

அமைச்சரவை உறுப்பினர்களல்லாத அமைச்சர்களையும் ஜனதிபதி நியமிக்கத் தத்துவமுடையவர்.

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டு, பொதுத்தேர்தல் முடிவுறும் இடைப்பட்ட காலப்பகுதியில் அமைச்சரவை அமைச்சர்களும் ஏனைய அமைச்சர்களும் தொடர்ந்து பணி புரிவர். அரசியலமைப்பு ஏற்பாடுகளின்கீழ் அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளது என்பது எப்படியிருப்பினும் ஜனதிபதி தொடர்ந்தும் பதவி வகிப்பார். ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை மக்களால் அவர் தேர்ந்தெடுக்கப்படுவார். 30 வயதுக்கு மேற்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர் ஜனதிபதி தேர்தலில் போட்டியிடலாம்.

அடுத்தடுத்து இருகாலப் பகுதிகளுக்குமேல் ஒருவர் தொடர்ந்து ஜனதிபதி பதவி வகிக்க முடியாது. ஜனதிபதி ஒரு தேசிய அரசுப்பேரவை உறுப்பினராகவிருந்தால் அவரது உறுப்பினர் பதவி இல்லாது போகும்.

தற்போதைய பிரதமர் முதலாவது ஜனதிபதியாவார்.

ஜனதிபதியொருவர் தனது பதவிக்காலம் முடியுமுன்னரே தன்து பதவியை எப்படியாவது இழக்க நேரின், தொடர்ந்து பதவிக்கு வருபவர் அவரின் மீதிக்காலத்துக்கே பதவி வகிக்கமுடியும்.

இவை இரண்டாவது அரசியலமைப்பு திருத்தத்தின் சில முக்கிய அம்சங்கள்.

### சந்திப்புகள் நடக்கவில்லை

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, பேரவைக்கு உள்ளேயும் வெளியேயுமுள்ள சகல அரசியல் கட்சித்தலைவர்களுடனும் இத்திருத்தங்கள் பற்றி சந்தித்துப் பேசவிருப்பதாக பேரவையில் இத்திருத்தங்கள்பற்றி கடந்த 23-ம் திகதி விளக்கிப்பேசுகையில் குறிப்பிட்டார்.

இன்றையதினம்வரை குறிப்பிட்டபடி அத்தலைவர்களைப் பிரதமர் சந்தித்துப் பேசாததால் சிலவேளைகளில் விவாதம் ஒத்திவைக்கப்படலாமென்றும் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஆனாலும் சிலவேளைகளில் திருத்தம்மீதான மூன்றாவது வாசிப்புக்கு முன்னர் பிரதமர் இத்தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

---

பாதிக்கப்பட்டவர்களின்

## அரிசி, சீனி ‘பெர்மிட்’முறை மீண்டும் அமுலுக்குவருகிறது

யாழ்ப்பாணம், செவ். இடம் பெயர்ந்து வந்த பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தொடர்ந்து பங்கீட்டுப் பொருட்களான அரிசி, சீனி பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கலவரத்தின் போது பங்கீட்டுக் கூப்பன்களை, இழந்தவர்கள். ‘பெர்மிட்’டுக்கு சீனி அரிசி பெற்றுவந்தனர். இந்த பெர்மிட் முறை பின்னர் நிறுத்தப்பட்டது.

புதிதாக கூப்பன் எடுக்கும் வரை, தொடர்ந்து அரிசி, சீனி ‘பெர்மிட்டுக்கு பெற தற்போது ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கூப்பனைத் தவற விட்டவர்கள் உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு ‘பெர்மிட்’டை பெற்றுக் கொள்ளலாம். (க)

## 20-ம் திகதி நியமனங்கள் தாக்கல்

கொழும்பு, திங்.

தெஹிவளைத் தொகுதி கிடைத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் 20-ம் திகதி தாக்கல் செய்யப்படும்.

தெஹிவளைத் தொகுதி எம். பியாக இருந்த கடற்றொழில் அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்காவின் மறைவை அடுத்து இங்கு இடைத் தேர்தல் நடைபெறுகிறது.

இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இடதுசாரி, ஐக்கியமுன்னணி சார்பில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள இதே வேளையில், டாக்டர் கொல்வினுக்கு எதிராக இத்தொகுதியில் எவரையும் நிறுத்தாது அவரின் வெற்றிக்காக உழைப்பது குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது. (இ)

## நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய் இந்துக்கல்லூரி சாரணர் இயக்கப் பொறுப்பாசிரியர் திரு. கே. எஸ். திசைராசா வலிகாமம் மேற்குப்பிரதேச சாரணர் சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாரணர் இயக்கத்தில் இவர் ஆற்றிய சிறந்த சேவைக்காக இலங்கைகுடியரசின் ஜனதிபதியால் பாராட்டு விந்து வழங்கி கௌரவிக்கப்பட்டார் - (கே)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
பூம்புகார்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
வல்லவன்
ஒருவன்

RIO (Jaffna) Daily 10-30, a.m. 4-45, 7-15 p. m.
PETER CUSHING - BERNARD LEE
in
FURY
AT SMUGGLER'S BAY
(கடத்தல்காரர் பக்கம் குமுறல்)
Eastman Colour Panascope

மனோஹரா (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி யாழ். நகர் போன்; 7642
தினசரி 10-30, 2-30, 6-30 9-45
ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
ஃ ஜெயலலிதா
தெய்வ மகன் (புதியபிரதி)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெயபிரபா — அசோகன்
துணிவே துணை

லிடோ (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
போன்; 7693
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
பணம் பந்தியிலே
அடுத்த வெளியீடு நீதிக்கு தலை வணங்கு

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-00 p.m only
'SEXY SUSAN KNOWSHOW'
(Adults only Color)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-00 9-30
போன்: 7180
எம். ஜி. ஆர் — ஜெயலலிதா
நடித்த
கன்னித்தாய்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
அன்னக்கிளி

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

## ஒரு மாதத்தில் மீண்டும் வேலை!

யாழ்ப்பாணம், செவ்வாய்

கடந்த பொதுத்தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன் தரம் உயர்த்தப்பட்ட அனலைதீவு உப-தபால் கந்தோர் அதிபர் திரு. ஐ. நடராசாவுக்கு ஒருமாதத்திற்குள் புதிய அரசு மீண்டும் வேலை வழங்கியுள்ளது. அனலைதீவு உப-தாபல் நிலையம் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்து திரு. நடராசா பதவியிழந்தார் இவர் 56 வயதுடையவராக இருந்த காரணத்தினால் தபால் கந்தோரிலும் இடம் கிடைக்கவில்லை.

அரசியல் காரணமாக பழி வாங்கப்பட்டதாக இவர் புகார் செய்ததைத் தொடர்ந்து தபால் அமைச்சர் திரு. ஷெல்டன ஜெயசிங்கா உடனடியாக இவரை மூளாய் உப-தபால் அதிபராக நியமித்துள்ளார்.

மூளாய் உப-தபால் நிலைய அதிபர் இளைப்பாறியதைத் தொடர்த்து அங்கு ஒருகாலி இடம் இருந்து வந்தது. அந்த இடத்திற்கு திரு. நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

தபால் தந்தி பிரதி அமைச்சர் திரு. அபேரத்தின பிலபிட்டியா எடுத்துக்கொண்ட துரிதநடவடிக்கை காரணமாக தபால் அமைச்சர் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

அகிலஇலங்கை தமிழ் பேசும் உபதபாலதியர்கள் சங்கத்தலைவர் திரு. வே. கதிர்காமத்தம்பி அமைச்சருக்கும் பிரதி அமைச்சருக்கும் இந் நியமனம் குறித்து நன்றி தெரிவித்துள்ளார். (க-அ)

## வேலணை கி. மு. சங்கம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ்,

வேலணைகிராம முன்னேற்ற சங்கம் அகதிகளுக்கென 5,852 ரூபாவை வேலணை கிராம மக்களிடம் சேகரித்து தலைவர் திரு ஏ கேதாரநாதன் அகதிகள் புனர்வாழ்வு நிதிச்சபையிடம் கையளித்தார். (கே-இ)

## உத்தியோகம்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் நிராகரிக்கப்படின் அந்த நிர்க்கதியான ஆசிரியருக்கு, நிதி வழங்குவதற்கு, சங்கம் போராடும். அதற்காகவே விண்ணபப பிரதியொன்றை சங்கத்திற்கு அனுபபிவைக்குமாறு கோருகிறோம்.' (க-அ)

## தொழிலுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ், சிங்களத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராட வேண்டும்.'

இவ்வாறு காரைநகர் சீநோர் அபிவிருத்தித்திட்ட மண்டபத்தில் நடைபெற்ற என்ஜினியரிங் தொழிலாளர் சங்க விசேஷ கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ். மாவட்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில் கூறினார். சங்கத்தலைவர் திரு. என். தில்லையம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. விஜயானந்தன் மேலும்பேசுகையில் கூறியதாவது:

'வெறும் கோஷங்கள் உணர்ச்சிகள் மாத்திரம் எக்கருமத்துக்கும் உதவமுடியாது. சில பிரச்னைகளை மட்டும் தீர்ப்பதால் தொழிலாளர்களது பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. சோஷலிச தீர்வே இறுதியானது. ஜே. ஆரின்தொழிற்சங்க முறியடிப்புமுயற்சிகள் ஜெர்மனியில் ஹிட்லர் செய்த பாஸிஸ நடவடிக்கைகளை ஒத்தவை. எப்படியான சர்வாதிகார நடவடிக்கைகள் இடதுசாரிகளுக்கும் தேசிய சிறுபான்மை இனத்துக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்பதை சரித்திரம் உணர்ந்தோர் தெரிந்து கொள்வார்கள்.'

## "தெய்வீக வாழ்வால் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"ஒழுக்கத்தின் உறைவிடமாய், உண்மையின் இருப்பிடமாய், பண்பின் சிகரமாய் வாழ்ந்தவரும், சிறந்த வைத்தியரும், சமூகத் தொண்டருமாகிய வைத்திய கலாநிதி திரு. பொன்னம்பலத்தின் மறைவு நமக்கெல்லாம் ஈடுசெய்யமுடியாததொரு பேரிழப்பாகும்"

இவ்வாறு தெல்லிப்பழை கூட்டுறவு மருத்துவசாலை முன்னாள் மருத்துவ அதிகாரியும் இலங்கைக் கல்வி, கலை, பண்பாட்டுக் காப்புக் கழகத்தின் துணைத் தலைவருமான அமரர் டாக்டர் ச. பொன்னம்பலத்தின் மறைவையொட்டி டேவிட் வீதியிலுள்ள அவரது இல்ல முன்றலில் நடைபெற்ற இரங்கற்கூட்டத்திற்குதலைமை வகித்து உரையாற்றிய சமாதான நீதவானும் யாழ் திவ்ய ஜீவனசங்கத் தலைவருமான சட்டத்தரணி திரு. சி. கனகரத்தினம் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து தமது உரையில், கூறியதாவது:

"தெய்வபக்தியிற் சிறந்தவரான டாக்டர் பொன்னம்பலம் தாளையன் பாபாவின் அருமைச் சீடராக இருந்து பின் சுவாமி சிவானந்த மகரிஷி, பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா ஆகியோரின் போதனைகளுக்கு அமைய நல்வாழ்வு வாழ்ந்து காட்டினார்.

"சாதி, சமய, இன பேதங்களைப் பாராட்டாது தன்னை நாடி வருபவர்களுக்கு எல்லாம் செய்த நற்சேவைகளை நான் மட்டுமல்ல இத்தீவின் நாலா பக்கங்களிலும் வாழுகின்ற மக்கள் நன்கறிவார்கள். தான் செய்கின்ற தரும கைங்கரியங்களை மற்றவர்களுக்குத் தெரிவதை விரும்பாத தன்னடக்கமுள்ளவர். அவர் இவ்வுலகில் பிறந்து சிறப்புறவாழ்ந்து தனக்கும் தன் சமூகத்திற்கும் பெரும் பயனாய் வாழ்ந்ததுடன் மற்றவர்களுக்கும்எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்."

யாழ் மத்திய கல்லூரி அதிபர் திரு. இ. கே. சண்முகநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"அமரர் பொன்னம்பலத்தை நான் நீண்ட காலங்களாக அறிவேன். அன்னார் புத்தூர் வைத்தியசாலையிலும் தெல்லிப்பளை வைத்தியசாலையிலும் தமது பணியினை ஆற்றுகையில் நான் அறிவேன். அவர் வைத்தியத்துறையில் மாத்திரமல்ல, மாணவர் செல்வங்களின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒளியூட்டுபவராகவும் அவர்களது வாழ்வின் உயர்வுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் கல்லூரியில் இடம்பெறுகின்ற எந்த நிகழ்ச்சிகளிலும், கூட்டங்களிலும் மிகுந்த ஆர்வத்துடன் பங்குகொள்வார், இது இவர் மாணவர்கள்மீதும் தான் கல்வி கற்ற கல்லூரியின் மீதும் கொண்ட பேராவலுக்கு எடுத்துக்காட்டாகும்"

ஓவியர் திரு. ச. பெனடிக்ற் பேசுகையில், "தன்னடக்கமும், தயாள சிந்தையும் கொண்ட டாக்டர் பொன்னம்பலம் எதையும் சிந்தித்துச் செயலாற்றுபவர் வைத்தியராகவிருந்து உடற் பிணிக்கு உற்ற மருந்தளித்ததோடு தியானம் எனும் திருமருந்தால் உளப்பிணியைப் போக்க முடியும் என உணர்ந்து அதை தன் வாழ்க்கையிற் கடைப்பிடித்தவர்" என்றார்.

யாழ். திவ்ய ஜீவன சங்க பஜனைக்குழுவினரும், யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட மாணவிகளும் பக்திப் பாடல்களைப் பாடினர். (கா-அ)

## ஆசிரியரின் சம்பளம் சொந்த முகவரிக்கு வரும்

யாழ்ப்பாணம், செவ்

பாதிக்கப்பட்ட தமிழர் ஆசிரியர்கள் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கங்கள் எடுத்த நடவடிக்கையின் பயனாக இடம் பெயர்ந்த ஆசிரியர்களின் செப்டம்பர் மாதச் சம்பளம் தனித்தனியான காசோலைகளாக ஆசிரியர்களின் வீடுகட்கு அனுப்பி வைக்கப்படும் என கல்வி அமைச்சு உறுதியளித்துள்ளது.

அக்காசோலைகள் விரைவில் அனுப்பிவைக்கப்படுமென மீண்டும் அமைச்சு அதிகாரிகள் உறுதியளித்துள்ளனரெனப் பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பளம் மொத்தமாக யாழ். கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ். மாவட்டத்தில் தங்கியிருக்கும் நுவரெலியா மாவட்ட ஆசிரியர்களுக்கு நுவரெலியா கல்விப் பணிப்பாளர் அறிவித்தல்கள் அனுப்பியுள்ளார்.

நுவரெலியா மாவட்ட ஆசி

(6-ம் பக்கம்பார்க்க)



## 4—10—77 செவ்வாய்

(செய்திகள்: காலை 6-30 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

6-05 சைவநற்சிந்தனை இ. வடிவேலு, 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-15 பாமாலை, 6-50 நாகசுரம், 7-00 திருமுறைப்பாடல் வேலுப்பிள்ளை சிவஞானம், 7-30 உலகச் செய்திகள், 7-35 பாட்டு பி. இளையதம்பி, 8-05 வாத்தியவிருந்து. 8-15 முஸ்லிம் நிகழ்ச்சி.

மாலை: 6-20 வீணையிசை, 6-30 பாட்டு வி. விஜயசிங்கம், 7-00 கமமும் புலமும் கமத்தொழிற் தகவற் திணைக்களத் தகவற் பிரிவினர் பதில் அளிப்பர், 7-30 உலகச் செய்திகள், 7-35 மெல்லிசைப் பாடல், 7-45 தமிழ்மூலம் சிங்களம் அரச கரும மொழித்திணைக் களகத்தினர் அளிக்கும் நிகழ்ச்சி. (முதலாந்தரத்திற்கான 11-வது பாடம்), 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல். எழுத்துக்கலை இயல்பான ஆற்றலா பயிற்சியினால் வளர்வதொன்றா? நடத்துபவர் - சில்லையூர் செல்வராஜன், 10-00 பாட்டு (இசைத்தட்டு). 10-30 உங்கள் விருப்பம். நேயர்கள் விரும்பிக் கேட்ட திரைப் பாடல்கள்.

(செ)

ஆசிரியர் கடிதம்:

## 'ஈழநாடு' முன்வர வேண்டும்

'ஈழநாடு' 29-9-77 திகதி இதழில் 'அமைச்சர் பதவி' என்ற தலைப்பில் வெளியான ஆசிரியருக்கு கடிதம் பாராட்டுக்குரியது.

அமைச்சர் பதவிகளில் ஒட்டிக் கொள்வதற்கு சந்தர்ப்பவாதிகள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சரியான பாதையைக் காட்டுவதற்கு 'ஈழநாடு' முன்வரவேண்டும். இல்லையெனில் கடந்த ஆட்சியின் போது இருந்ததை விட எமது நிலைமை இன்னும் மோசமாகிவிடும். அமைச்சர் பதவி சாதாரண ஆட்களுக்கு வழங்கப்படுமானால் நமது தாயகமான யாழ்ப்பாணத்திலேயும்கூட நம்மால் வாழ முடியாமல்போய்விடும்.

ராஜநாயகம்,
யாழ்ப்பாணம்.

**மணிவாக்கு**

உனது பழைய இன்பகரமான நினைவுகளையெல்லாம் ஒன்றுகூட்டி வயோதிப காலத்தில் பஞ்சுமெத்தையாக்கிக்கொள்.

—டார்டிங்டன்

ஈழநாடு

The Eelanaadu

## திருத்தமும் தமிழரும்

திருமதி சிறிமா பண்டாரநாயகாவைத் தலைவியாகக்கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி, மாஸ்கோ சார்பு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவைகளும் இணைந்த ஐக்கிய முன்னணி 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டது.

அந்தத்தேர்தலில் இலங்கையை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்துவோம்; புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம் என்று ஐக்கிய முன்னணி வாக்குறுதியளித்திருந்தது.

இப்படிப் பல வாக்குறுதிகளை அது அளித்திருந்தது.

எப்படியோ அரசியலமைப்புச்சம்பந்தமாகக் கொடுத்த வாக்குறுதியை அது நிறைவேற்றியது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. 1972ம் ஆண்டு மே மாதம் 22ந் தேதி புதிய குடியரசு உருவானது.

இப்போது அதாவது 1977ம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவைத் தலைவராகக்கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி நான்கில் மூன்றுபங்கு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஒருதனிக்கட்சி இவ்வளவு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டது இலங்கையின் சரித்திரத்தில் இதுதான் முதல்தடவை.

புதிய அரசியலமைப்பில் திருத்தம் கொண்டுவரப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சியும் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியளித்திருந்தது.

வேறுபல வாக்குறுதிகளையும் இது அளித்திருந்தது.

அரசியலமைப்பு சம்பந்தமாகக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினால் தான் இதர வாக்குறுதிகளை நிறைவேற்றலாமென்று ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் கருதியிருக்கலாம்.

இதன்படி அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தம் இன்று பிற்பகல் தேசிய அரசுப் பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. நாளையும்நாளை மறுதினமும் விவாதம் நடைபெற்று வாக்கெடுப்புக்கு விடப்படும்.

திருத்த மசோதா நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தம்முழு அரசியலமைப்பையே மாற்றியமைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இத்திருத்தத்தை முன்பு ஆட்சிபீடத்திலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் சககட்சிகளாக இணைந்திருந்த லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவும் எதிர்க்கின்றன.

அரசியலமைப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தம் ஜனாதிபதியைச் சர்வாதிகாரியாக்கும் என்றும் இத்திருத்தம் நிறைவேறினால் இங்கு மக்கள் சகல சுதந்திரங்களையும் இழந்து விடுவார்களென்றும் சர்வாதிகார ஆட்சியே இங்கு ஏற்படுமென்றும் இந்தக் கட்சிகள் கூறுகின்றன.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சிகள் ஆட்சிக்குவந்தாலும் என்ன சுதந்திரத்தை அனுபவிக்கின்றார்களென்பதே கேள்வி எனவே சர்வாதிகார ஆட்சியொன்று புதிதாக வந்தாலும் அது அவர்களைப் பொறுத்தவரையில் ஒன்றும் புதிதாக இருக்காது.

அரசியலமைப்புத் திருத்தம் சம்பந்தமாகத் தமிழ் மக்களுக்குப் பெரும்பாலும் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலையென்னவென்பது இத்தலையங்கம் எழுதும் வரை முடிவாகத் தெரியவில்லை.

தமிழ்மக்களைப்பொறுத்தவரையில் புதிய சர்வாதிகாரம் பற்றிய கவலையில்லை. ஆனால் அரசியலமைப்பில் செய்யப்படும் மாற்றமாவது பயனளிக்க வேண்டுமென்பதே அவர்களின் கவலை.

எனவே புதிய திருத்தத்தில் ஜனாதிபதி பதவியுடன் உபஜனாதிபதி ஒருவரையும் தெரிவுசெய்யவேண்டுமென்றும் அவர் ஒரு தமிழர் அல்லது முஸ்லிமாக மாறிமாறித் தெரிவுசெய்யப்படவேண்டுமென்றும் ஒரு திருத்தம் கொண்டுவரலாமென்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

இதேபோன்று மாவட்ட அமைச்சர்கள் மற்றும் அரசியலமைப்புச் சம்பந்தமான எந்தத் திருத்தங்களிலும் தமிழ்மக்களுக்குப் பயன்படக்கூடிய திருத்தங்களையும் கொண்டுவரவேண்டியது அவசியமாகும்.

இப்படிக் கொண்டுவரப்படும் திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டால்கூட நஷ்டமில்லை, தமிழ்மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்று சொல்லும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த தேசியக் கட்சிகள் என்று அழைக்கப்படும் கட்சிகளின் உண்மை நிலையையாவது வெளிக்கொணர இது உதவலாமல்லவா.

# மனைவி நஞ்சுக்குப் பலி!
# கைதுசெய்யப்பட்ட கணவர் பஸ் முன்பாய்ந்து மரணம்

யாழ்ப்பாணம், செவ். மனைவியை ஊசிமூலம் நஞ்சூட்டிக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளம் கணவர் ஒருவர் பொலிஸார் முன்னிலையில் ஓடும் பஸ்ஸின் முன்னால் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் ஒன்று நேற்று யாழ். நகரில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் என்பவரே இவ்வாறு உயிரை மாய்த்தவராவார்.

இச்சம்பவம் பற்றிய விபரம் வருமாறு;

ஆரியகுளத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் என்பவர் 3 வருடங்களாகப் பிரிந்து வாழ்ந்த தமது மனைவியான புஷ்பராணியை கடந்த சனிக்கிழமை இரவு படுக்கையில் வைத்து ஊசி மூலம் நஞ்சுத்திராவகம் ஏற்றிக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஊசியின் மூலம் ஏற்றியதாகக் கூறப்படும் நச்சுத் திராவகப் போத்தல் வைக்கப்பட்டுள்ள இடத்தைக் காட்டுவதாகக் கூறி யாழ். பொலிசாருடன் ஜீப்பில் சென்ற சண்முகலிங்கம், ஆரியகுளத்தின் அருகே ஜீப்பிலிருந்து இறங்கி அப்போது யாழ்.நகரிலிருந்து கோப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸின் முன்னே பாய்ந்தாராம். உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அந்நபர் மரணமடைந்திருந்தாராம்.

### மனைவியின் மரண விசாரணை

இது இவ்வாறிருக்க ஊசியினால் ஏற்றப்பட்ட நஞ்செனக் கருதப்படும் சண்முகலிங்கத்தின் மனைவி புஷ்பராணியின் மரணவிசாரணையை மேற்கொண்ட யாழ் பதில் நீதிவான் திரு. எஸ் கனகரத்தினம், தீர்ப்பை ஒத்திவைத்தார்.

இறந்தவரின் மகளான ஷியாமினி என்ற 8 வயதுச் சிறுமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

### சிறுமி சாட்சியம்

கடந்த சனிக்கிழமையிரவு 6 மணிக்கு நானும் எனது 4 வயது தம்பியும் அம்மாவும் சாப்பிட்டு விட்டு நித்திரைக்குப் போனோம். இரவு 8 மணியளவில் வீட்டுக்கு வந்த 'அப்பா தான் கொண்டு வந்திருந்த மாட்டுத்தாள் பையிலிருந்து ஏதோ ஒன்றை எடுத்து அம்மாவின் வலது கையில் குத்தினார். பின்னர் நாங்கள் அதிகாலை எழுந்து பார்த்த போது அம்மாவின் வாயாலும், மூக்காலும் நுரை தள்ளியது. நாங்கள் வெளியே ஓடிச் சென்று அயலவரிடம் விபரத்தைச் சொல்லி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம்.

வைத்திய பரிசோதனை நடாத்திய வைத்திய அதிகாரி தனது தீர்ப்பில் இறந்தவரின் உடலில் நஞ்சுத் திராவகம் ஏற்றப்பட்டதால் இம்மரணம் சம்பவித்துள்ளதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து திரு. கனகரத்தினம் மேற்படி பெண்ணின் உறுப்புக்களை இரசாயன பரிசோதனைக்குட் படுத்த கொழும்புக்கு அனுப்பி வைத்ததுடன் அறிக்கைகள் வரும் வரை தமது தீர்ப்பை ஒத்திவைத்துள்ளார்.

பஸ்ஸின் முன் பாய்ந்த கனகரத்தினம் சண்முகலிங்கத்தின் மரண விசாரணை இன்று நடைபெறும்.

(இமை-திரு-கா)

### சகல—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்துள்ளார்.

வளாக மாற்றம் உட்பட தமிழ் மாணவர்களின் பிரச்னையும் இப் பேச்சுவார்த்தையில் இடம்பெறுமெனக் கூறப்படுகிறது.

வித்தியாலங்கார வளாகத்தைச் சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானோர் யாழ் வளாகத்திற்கு மாற்றம்பெறமுயல்வதனால், இவ்விடயம் பற்றியும், பேசப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

துணைவேந்தர், வளாகத்தலைவர் சந்திப்பிற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லையானாலும், கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளருடனான இச்சந்திப்பைத் தொடர்ந்து மற்றைய சந்திப்புக்கள் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இச் சந்திப்புக்களை மேற்கொள்வதற்காக, வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து மாணவர், விரிவுரையாளர் பிரதிநிதிகள் இன்றுகொழும்பு செல்கின்றார்கள்.

பேச்சுவார்த்தை முடிவுகள், பொதுக்கூட்டமொன்றில் வெளியிடப்படுமென சகல வளாக தமிழ் மாணவர் விரிவுரையாளர் குழுத்தலைவர் தெரிவித்தார்.

கட்டுப்பெத்தைவளாக மாணவருக்கான இறுதியாண்டுப் பரீட்சையை அக்டோபர் 17ம் திகதியன்று ஆரம்பிப்பதை மாணவர்கள் ஆட்சேபித்துள்ளனர். இது பற்றி திரு கே சி நித்தியானந்தா பதில் துணைவேந்தர் பேராசிரியர் குரூப்பை சந்தித்து பேசுவார்.

அநேகமாக இப்பரீட்சையை இம்மாதம 31ந் தேதிநடாத்துமாறு திரு நித்தியானந்தா கோரவிருக்கிறார். (க)

### ஆசிரியரின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரியர்கள் தமக்கு அனுப்பப்பட்ட படிவங்களை பூரணப்படுத்தி இம்மாதம் 5-ம் திகதி புதன்கிழமை யாழ். கல்வித் திணைக்களத்துக்குச் சென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டச் செயலாளர் திரு. சி. சிவபாலசிங்கத்துடன் தொடர்பு கொண்டு தமது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கா-இ)

### யாழ்.கல்லூரி..

(1ம்பக்கத்தொடர்ச்சி)

ரும், 6வருடம் பூர்த்தியடைந்தோரும் ஏககாலத்தில் பாடசாலை அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளனர். இதனால் பாடசாலைகளில்இடநெருக்கடியும் ஆசிரியர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

#### தனியார் பாடசாலைகள்

இது ஒருபுறமிருக்கத் தனியார் பாடசாலைகள் சிலவற்றில் நிச்சயம் இடம் கிடைக்குமென நம்பி அரசாங்க பாடசாலைகளுக்கு விண்ணப்பங்களை அனுப்பாது பெற்றோர் சிலர் இருப்பதாகவும் இதனால் பின்னர் இவர்கள் கஷ்டமடையவேண்டி நேரிடுமெனவும் தனியார்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பாடசாலைகளில் தான் இடம்பெற வேண்டுமெனப் பெற்றோர் குறித்த பாடசாலைகளையே எதிர்பார்க்காது, அரசாங்க பாடசாலைகளுக்கும் விண்ணப்பங்களை அனுப்புவதன் மூலம் இறுதிநேரஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ளலாமென தனியார்துறை வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

#### 10ந் தேதி இறுதிநாள்

அரசாங்க பாடசாலைகளுக்கு அனுமதி கோரி விண்ணப்பிக்கும் இறுதிநாள் 10ம் திகதியாகும். விண்ணப்பங்கள் அனுமதி கோரும் பிள்ளையின் வசிப்பிடத்திற்கு மிக அண்மையில் உள்ள பாடசாலைத்தலைவருக்கு பதிவுத்தபாலில் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கபபடல் வேண்டும். (கி-அ)

### ஜைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

10 பிணையாட்களை கடத்தல்காரர்கள் விடுவித்தனர் என்றும் தற்போது விமானத்தில் 12 பிரயாணிகள், 7 விமானச் சிப்பந்திகளுடன், 2 கடத்தல்காரரும் விடுவிக்கப்பட்ட 6 கைதிகளுமே இருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

### தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் அமைப்பு திருத்த விவாதம் ஆரம்பமாகும்போது தமிழ்மக்களினதும் தமிழர் கூட்டணியினரினதும் இன்றைய நிலை பற்றி அறிக்கை ஒன்று விடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதேசமயம் நேற்றுக்காலை கொழும்பில் திரு சிவசிதம்பரம் இல்லத்தில் கூடிய தமிழர் விடுதலைக்கூட்டணி நடவடிக்கைக்குழு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் கூடிய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானங்களை ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

### அகதிகளுக்கு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பயிற்சிநிலையத்திலும் அமைந்துள்ள முகாம்களில் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு குடும்பத்தின் நிலைகளையும் நன்கு ஆராய்ந்த பின்னரே காணி அவர்களுக்கு வழங்கப்படுமென்று சமூக சேவைப்பகுதி அதிகாரிஒருவர் தெரிவித்தார். (கெ-இ)

### மரண அறிவித்தல்

R. கந்தசாமி

இராமு, சின்னத்தங்கச்சி ஆகியோரின் புதல்வனும், பாலுவின் சகோதரனுமாகிய கந்தசாமி காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் 4-10-77 இன்று 49/4, ஸ்ரான்லி வீதியிலுள்ள இல்லத்திலிருந்து 4-30மணிக்கு வில்லூன்றிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். எஸ் யோகராசா (மைத்துனர்) ராஜ் மோட்டோர்ஸ். 7297

### மரண அறிவித்தல்

திருமதி. யோகம்மா

சிறும்பியடி திருமதி தாமோதரம்பிள்ளை யோகம்மா காலமாகிவிட்டார். இவர் நித்தியானந்தன் (நித்தி) (பொறுப்பாளர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கு), பேரின்பநாதன், கணேசானந்தன் (ஆனந்தன், சவூதி அரேபியா), திருமதி கமலேஸ்வரி குணபாலசிங்கம் ஆகியோரின் மாமியாராவார். அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக, இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு, 53, ஸ்டான்லி வீதியில் உள்ள இல்லத்திலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 7299

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registered as News paper in [illegible] Lanka.